இணைப்பு-VIII

(291 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 15-சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

அறிவிப்புகள், 2008-2009

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு

1. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 1974 ஆம் ஆண்டின் நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டின் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் ஆகிய இரண்டு முக்கியமான சட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது. தொழிற்சாலையின் உரிமையாளர்கள் இவ்விரு சட்டங்களின்கீழ் வாரிய இசைவாணை வேண்டி விண்ணப்பிக்க வேண்டும். தொழிற்சாலைகள் இசைவாணை பெறுவதை எளிதாக்க இணையதளம் மூலம் நேரடியாக விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முறை நடப்பாண்டில் அறிமுகப்படுத்தப்படும்.

2. அதிகளவில் மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதிகளில் வெளிவரும் கழிவுகளின் நச்சுத்தன்மை மற்றும் மாசுபடுத்தும் அளவு முதலியவற்றைக் கருத்தில் கொண்டு வாரியம், தமிழ்நாட்டில் மணலி, கடலூர், தூத்துக்குடி, மேட்டூர், இராணிப்பேட்டை, ஸ்ரீபெரும்புதூர், பெருங்குடி தகவல் தொழில்நுட்பப் பூங்கா பகுதி, பெருந்துறை, கும்மிடிப்பூண்டி, திருப்பூர் ஆகிய 10 முக்கிய இடங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளைத் தொடர்ந்து கண்காணிக்கவும், அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியாக ஒரு உதவி சுற்றுச்சூழல் பொறியாளரை நியமித்துள்ளது. இப்பகுதிகளில் நச்சுத்தன்மை கொண்ட வாயுக்கள் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறினால் அவற்றை உடனடியாகக் கண்டறிந்து தொழிற்சாலையின்மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 2008-2009 ஆம் ஆண்டில் ரூ85 இலட்சம் செலவில் அதிநவீன கருவிகளை வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும். இதனால் வாரியத்தின் கண்காணிப்புத் திறன் மேம்படுவதுடன் பொதுமக்களின் உடல் நலமும் பாதுகாக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2008 மே 13

3. சுற்றுச்சூழலை பெரிதும் பாதிக்கக்கூடிய சில பழக்கங்களும், பொருள்களின் பயன்பாடும் பெருகி வருவது வேதனையை அளிக்கிறது. இதனைக் கட்டுப்படுத்த கையாளவேண்டிய செயல்முறைகளைப் பற்றியும், விதிக்கக்கூடிய கட்டணங்களைப் பற்றியும் பரிந்துரைக்க அண்ணா பல்கலைக்கழகம்மூலம் ஓர் ஆய்வு செய்து அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4. மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் மற்றும் மாநில அளவிலான நிபுணர்கள் குழு 2008-2009 ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கும். இதனால் சுற்றுச்சூழல் அனுமதிக்கென மத்திய அரசை விண்ணப்பித்து வந்த பல்வேறு தொழிற்சாலைகள் தமிழகத்திலேயே அந்த அனுமதியைப் பெறலாம். இஃது 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க அறிவிக்கையின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு செயல்படுத்தப்படும்.

5. மாசு தடுப்பு முறைகளில் சுற்றுச்சூழலுக்கு உகந்த சிறந்த தொழில்நுட்பத்தினைத் தொழிற்சாலைகள் தேர்ந்தெடுப்பதற்காக, ஒரு சுற்றுச்சூழல் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு ஏற்படுத்தப்படும். இந்தக் குழு தூய தொழில்நுட்பங்களின் சாதக, பாதக பொருளாதார மற்றும் நடைமுறைக்குகந்த சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்ந்து தொழிற்சாலைகள் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு தொழில்நுட்பங்களை சரியான மற்றும் சிக்கனமான முறையில் தேர்ந்தெடுக்க உதவும்.

6. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் நிர்வாகத் திறனை மேம்படுத்தவும், தொழிற்சாலைகள் இசைவாணைகள் பெறுவதைத் துரிதப்படுத்தவும் மூன்று புதிய மாவட்ட அலுவலகங்கள் 2008-2009 ஆம் ஆண்டில் திருவள்ளூர், பெருந்துறை மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் தொடங்கப்படும்.

7. 2008-2009 ஆம் நிதி ஆண்டில் தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் தலா ரூபாய் 100 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

8. கிராமங்களில், நீர்நிலைப் புறம்போக்கு நிலங்கள், தரிசாகக் கிடக்கும் மலைப்பகுதிகள் போன்ற பொது இடங்களில், மரங்களை வளர்த்து மாவட்டத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு என்ற வகையில் பசுமைப் போர்வையை அதிகரிக்க ரூ.75 இலட்சம் செலவில் ஒரு புதிய திட்டம் இந்த ஆண்டு தொடங்கப்படும். இதன்கீழ் அனைத்து

2008 மே 13]

மாவட்டங்களிலும் ஒரு கிராமப்பகுதி தெரிந்தெடுக்கப்பட்டு பசுமையாக்கப்படும்.

9. பள்ளி மாணவர்களிடையே சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்வண்ணம் தமிழகத்தில் 10,000 மாணவர்களைத் தெரிந்தெடுத்து அவர்களை .வனப் பகுதிகளுக்கு அழைத்துச் சென்று முகாம்கள் நடத்த ரூ.1 கோடி செலவிடப்படும்.

10. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மாநில அரசின் நிதியுதவியுடன் அனைத்து மாவட்டங்களிலும் சூழல் மன்றங்களை 1999-ல் உருவாக்கிய பெருமை தமிழகத்திற்கே உரியது. தேசிய பசுமைப்படை அமைப்புகளுக்கு மத்திய அரசு வழங்கும் நிதி உதவிக்குச் சமமாக, இச்சூழல் மன்றங்களுக்கு தமிழக அரசு கூடுதல் நிதியுதவி வழங்க ரூ.15.50 இலட்சம் செலவிடப்படும்.

11. தமிழகத்தில் உள்ள சுற்றுச்சூழல் மன்றங்கள் மற்றும் தேசிய பசுமைப்படை முதலியவற்றில் 3.5 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர். சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை மாநிலம் முழுவதும் ஏற்படுத்தும் வகையில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கங்கள் அமைக்கப்படும்.

12. சுற்றுச்சூழல் பாதுகாப்பினைப் பாதிக்காத வகையில் பொருளாதார மேம்பாட்டினை அடைவதற்கு ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம் 2008-2009-ல் தயாரிக்கப்படும். அதேபோல் சுனாமி போன்ற நிகழ்வுகளால் பாதிப்படையக்கூடிய கடலோரப் பகுதிகளின் வரைபடமும் தயாரிக்கப்படும். இவ்விரு பணிகளும் இந்த நிதியாண்டிலேயே ரூ.4.30 கோடி செலவில் செய்து முடிக்கப்படும்.

13. பருவநிலை மாறுதலால் உணவுப் பாதுகாப்பு, உடல் ஆரோக்கியம், இயற்கை சீர்நிலை முதலியவற்றிற்கு பெரும் பாதிப்பு ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது. தமிழ்நாட்டில் பருவநிலை மாறுதலால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தடுக்கவும், அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறியவும் 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் செலவில் ஆய்வு மேற்கொள்ளப்படும்

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS